செ.வெ.எண்.262 நாள்: 20.04.2018

திருநெல்வேலி மாவட்டம் பாளையங்கோட்டை வட்டம் திருவேங்கடநாதபுரத்தில் கிராம சுயாட்சி இயக்க திட்டத்தின் கீழ் திருநெல்வேலி மாவட்ட கண்காணிப்பு அலுவலர் மற்றும் முதன்மை செயலர்/ தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் திரு.ராஜேந்திரகுமார்,இ.ஆ.ப., அவர்கள் இலவச சமையல் எரிவாயு இனைப்பு மற்றும் மானிய விலையிலான LED பல்புகளை வழங்கினார்.

-------

திருநெல்வேலி மாவட்டம் பாளையங்கோட்டை வட்டம் திருவேங்கடநாதபுரத்தில் கிராம சுயாட்சி இயக்க திட்டத்தின் கீழ் இலவச சமையல் எரிவாயு இனைப்பு மற்றும் மானிய விலையிலான LED பல்பு வழங்கும் விழா மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப, அவர்கள் தலைமையில் இன்று (20.04.2018) நடைபெற்றது. இவ்விழாவில் திருநெல்வேலி மாவட்ட கண்காணிப்பு அலுவலர் மற்றும் முதன்மை செயலர்/ தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் திரு.ராஜேந்திரகுமார்,இ.ஆ.ப., அவர்கள் 50 பயனாளிகளுக்கு இலவச சமையல் எரிவாயு இனைப்புகளையும், 20 பயனாளிகளுக்கு மானிய விலையிலான LED பல்புகளையும் வழங்கினார்.

திருநெல்வேலி மாவட்ட கண்காணிப்பு அலுவலர் மற்றும் முதன்மை செயலர்/ தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் அவர்கள் பேசியதாவது:-

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள 29 கிராம ஊராட்சிகளிலும் கிராம சுயாட்சி இயக்கத்தின் கீழ் மத்திய அரசின் 7 திட்டங்கள் 100 சதவீதம் முழுமையாக நிறைவேற்றும் வகையில் 15 நாட்களும் மிக சிறப்பாக கொண்டாப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் சமையல் எரிவாயு இணைப்பு இல்லாத குடும்பங்களுக்கு இலவச எரிவாயு இணைப்பு வழங்கப்படுகிறது. மின்சார சிக்கனத்தை கருத்தில் கொண்டு குடும்பங்களுக்கு மானிய விலையில் எல்ஈடி பல்புகள் வழங்கப்படுகிறது. அனைத்து பொது மக்களும் எல்ஈடி வாங்கி மின்சார சிக்கனம் ஏற்படுத்த வேண்டும். 18 வயது பூர்த்தி அடைந்த அனைவருக்கும் இலவச வங்கி கணக்குகள் தொடங்க வேண்டும். பிரதம மந்திரி ஆயிள் காப்பீடு திட்டத்தில் ரூ.330 மற்றும் ரூ.12 செலுத்தி அனைவரும் காப்பீடு செய்ய வேண்டும். ரூ.330 ஆயுள் காப்பீடு செய்தவர்கள் விபத்தில் மரணமடைந்தாலோ, இயற்கை மரணம் அடைந்தாலும் அவரது குடும்பத்திற்கு ரூ 4 லட்சத்திற்கான இழப்பீடு தொகை வழங்கப்படும். மேலும் ரூ.12 ஆயுள் காப்பீடு செய்தவர்கள் விபத்தில் மரணமடைந்தாலோ, இயற்கை மரணம் அடைந்தாலும் அவர்களது குடும்பத்திற்கு ரூ.1.50 லட்சம் இழப்பீடு வழங்கப்படும். ரூ.330 காப்பீடு திட்டத்தில் சேர்ந்திட 50 வயதிற்கு உட்பட்டவர்களாக இருக்க வேண்டும். ரூ.12 காப்பீடு திட்டத்தில் சேர்ந்திட 70 வயதிற்கு உட்பட்டவர்களாக இருக்க வேண்டும். மேலும் இக் காப்பீடு செய்தவர்கள் கை, கால் முறிவு மற்றும் செயல்படமால் நிலை ஏற்பட்டாலும் அவர்களுக்கான இழப்பீடு தொகை வழங்கப்படும். மத்திய அரசின் 7 வகையான திட்டங்களும் முழுமையாக செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அனைத்து குடும்பங்களும் இத்திட்டங்களை பயன்படுத்திக்கொள்ள வேண்டும். என பேசினார்.

இவ்விழாவில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.முத்துராமலிங்கம்,மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் திரு.பழனி, கிராம சுகதார இயக்க மத்திய பார்வையாளர்கள் திரு. கலாதரன்,திரு.பத்மநாபன், மாவட்ட வழங்கல் அலுவலர் திரு.புண்ணியகோட்டி,அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி,

**********